தலைவி அவர்கள் அந்தக் கோப்பிலே கையொப்பம் இட்டிருக்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு முன்னாலே நிதி ஒதுக்கீடு செய்தும் இதுவரையிலும் செயல்படுத்தாமல் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதனையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பன்னெடுங்காலமாக குடிநீர்ப் பிரச்சினை இருந்து வந்த மணவாளன் நகர் பகுதிக்கு 35 லட்ச ரூபாய் குடிநீருக்காக ஒதுக்கப்பட்டு அங்கு குடிநீர்ப் பணிகள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மணவாளன் நகர் பேரூராட்சி போன்ற ஒரு பெரிய நகரம். அந்த நகரத்திலே ஒரே ஒரு கூட்டுறவுக் கடைதான் இயங்கி வருகிறது. எனவே, அந்தக் கூட்டுறவுக் கடையை இரண்டாகப் பிரித்து மணவாளன் நகரிலிருந்து கபிலர் நகருக்கு ஒரு கூட்டுறவு அங்காடியை ஏற்படுத்தித் தர வேண்டுமாய் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த இனிய வாய்ப்பினை தந்தமைக்காக பேரவைத் தலைவருக்கு மீண்டும் நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம்.

8. அரசினர் தீர்மானம்

பேரவை விதி 32-ஐ தளர்த்துதல்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 4–5–1995 அன்று தளர்த்தி அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்." என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1995 மே 3

ஏற்போர் ‘ஆம்’ என்க (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க

மறுப்போரே இல்லை என்று கருதுகின்றேன்.

மறுப்போரே இல்லை

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு இவ்வாறு செய்வது போல் தோன்றுகிறதே . திரு. செ.து. வரதராஜன்.

7. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 23-கூட்டுறவு--தொடர்ச்சி

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது நான் பேசுகின்ற வாய்ப்பு கிடைக்குமா என்ற ஒரு ஐயம் இருந்தது. இருப்பினும் நான் பேசுவதற்கு காங்கிரஸ் கட்சித் தோழர்கள் மிகத் தடையாக இருந்தார்கள் என்று நினைத்தபோது, அவர்கள் வெளியில் சென்ற பிறகு கூட மைக்கை கையிலே எடுத்துக் கொண்டு சென்றதால்-- அந்த அவல நிலையை பார்த்த பிறகு நமக்கு பேச வாய்ப்பு கிடைக்குமா என்ற ஐயம் இருந்தது. உடனே என்னுடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் எப்படியும் எத்தனை தங்கு தடைகள் வந்தாலும் அதை உடனே தீர்த்து விடுகின்ற வகையில் செயல்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் நான் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கொடுத்ததற்கு என்னுடைய தலைவிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்கள், எதிர்க்கட்சித் தோழர்கள், தமிழக அரசு ஏழை மக்கள் பயன்படுத்தும் அரிசி விலையை உயர்த்தி, பின்பு அரிசி விலையை குறைத்தது ஒன்றும் சாதனையில்லை என்கிறார்கள். மத்திய அரசு பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் டீசல், பெட்ரோல், கிரோஸின், சர்க்கரை, இரும்பு, சிமெண்டு, தபால், டெலிபோன், ரயில் பயண டிக்கெட்டுகள், பிளாட்பார்ம் டிக்கெட்டுகள், உரம் போன்ற பொருள்கள் விலையை உயர்த்தி உள்ளார்களே, இந்த விலையை இவர்கள் குறைப்பதற்குத் தயாரா என அறிய விரும்புகிறேன்.

விவசாயப் பொருட்கள் நல்ல உற்பத்தியும் ஜனபெருக்கம் இல்லாத முன் காலத்தில், முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எலிக் கறியையும், கடலை பிண்ணாக்கையும் சாப்பிடச் சொன்னார்கள். அது